மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: குறுகியக் காலக் கடனை நடுத்தரக் கடனாக மாற்றுவதன்மூலமாக அது ஓரளவிற்குத் தள்ளிவைக்கப்படுகிறது. குறுகியக்காலக் கடன், வாங்கிய கடனை ஒரு ஆண்டிலே திரும்பக் கொடுக்க வேண்டுமென்பது. நடுத்தர ஆண்டுக் கடன் என்பது 3 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள்வரை தவணை கொடுக்க வேண்டுமென்பது. ஆனுல் இப்பொழுது நாம் கருத்தில் கொண்டுள்ளது, 3 ஆண்டுகளில் குறிப்பிட்டுத் தரவேண்டுமென்பது. ஆதலால் முதல் ஆண்டு கொடுக்கவேண்டிய தவணை எற்கனவே தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அலுவல் ஆய்வுக்குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில அறிவிப்புகள். தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின்கீழ் 1969–70-க்கு பின் வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1 மாண்புமிகு பேரவைத் தலைவர் (தலைவர்).
2 மாண்புமிகு பேரவை முன்னவர்.
3 மாண்புமிகு நிதி அமைச்சர்.
4 மாண்புமிகு உணவு-விவசாய அமைச்சர்.
5 மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர்.
6 மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர்.
7 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
8 திரு. து. ப. அழகமுத்து.
9 திரு. பி. ஜி. கருத்திருமன்.
10 திரு. கே. விநாயகம்.
11 திரு. பி. கே. மூக்கையா தேவர்.
12 திரு. எ. பாலசுப்பிரமணியன்.
13 திரு. எ. ஆர். மாரிமுத்து.
14 திரு. க. ர. நல்லசிவன்.
15 திரு. ஆ. கு. சுப்பையா.
16 ஹாஜி மா. மு. பீர் முஹம்மது.
17 திரு. ம. பொ. சிவஞானம்.

(இ) நடைமுறை விதிக்குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப்பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ், 1969–70-க்கு, பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1 மாண்புமிகு பேரவைத் தலைவர்.
2 மாண்புமிகு முதலமைச்சர்.
3 மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர்.
4 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
5 திரு. எல். கணேசன்.
6 திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.
7 திரு. நா. கிருட்டிணன்.

8 திரு. பி. எஸ். மணியன்.
9 திரு. செஞ்சி. வெ. முனுசாமி.
10 திரு. ஈ. எம். நடராசன்.
11 திரு. பி. ஜி. கருத்திருமன்.
12 திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
13 திரு. க. முருகேசன்.
14 திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.
15 திரு. என். வரதராசன்.
16 திரு. கே. என். குமாரசாமி.
17 திரு. ஆ. கு. சுப்பையா.

பேரவைத் தலைவர், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(ஈ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1969-70-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்குச் சட்டப்பேரவையின் பதினொன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டுக் கீழ்க்கண்ட பதினொன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்.

1 திரு. செ. கந்தசாமி கவுண்டர்.
2 திரு. மூ. மாரிமுத்து.
3 திரு. பொ. பொன்னம்பலம்.
4 திரு. வி. டி. அண்ணாமலை.
5 திரு. க. மு. கதிரவன்.
6 திரு. இ. ராமசாமி.
7 திரு. கே. என். குமாரசாமி.
8 திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்.
9 திரு. அ. மாரிமுத்து.
10 திரு. கொ. இர. ஞானசம்பந்தன்.
11 திரு. மு. இராமன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1969–70-ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் நாளிலிருந்து மேற்படி குழுவின் அமைப்புப் பற்றிப் பேரவை விதியில் பதினொன்று உறுப்பினர்களுக்குப் பதிலாக பதின்மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, எஞ்சியுள்ள இரண்டு இடங்களுக்கு ஆன தேர்தல் அடுத்த சட்டப்பேரவைக் கூட்டத்தில் நடத்தப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

பேரவையின் 221 (1)-வது விதிக்கிணங்க—
1 திரு. சி. சேதுராமன்.
2 திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
3 திரு. ந. தீர்த்தகிரி.
4 திரு. எம். அப்துல் கபூர் சாகிப்.

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.